பக்கங்கள்:-15

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 29 | வெள்ளிக்கிழமை | 12.04.2024 | அதிர்வு 255

## சு.கவின் அதிகாரம் தற்போது யார் வசம்?

**18 ஆம் திகதி கூடுகின்றது தேர்தல்கள் ஆணைக்குழு**

ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் அதி காரம் தற்போது யார் வசம் உள்ளது 06



# தமிழ்ப் பொது வேட்பாளர் யார்? யாழில் இன்று முக்கிய சந்திப்பு

## அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையில்



(பிரபாகரன் டிலக்சன்)

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் தற்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் அதிகம் பேசப்பட்டு வருகின்றது. 06

# ராஜபக்ஷ பட்டாளத்தின் அரசியலுக்கு வரும் தேர்தல்களில் முடிவு கட்டப்படும்

## சஜித் அணி சூளுரை

எதிர்வரும் தேர்தல்களில் ராஜபக்ஷ கூட்டணியின் அரசியலுக்கு முடிவு கட்டுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வெற்றியடைந்தே தீருவார். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிவாகை சூடும்.

மொட்டுக் கட்சிக்கும் அந்தக் கட்சியைப் 06



# ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வனை விசாரணைக்கு உட்படுத்திய ரி.ஐ.டி.

## இரண்டரை மணிநேரம் துருவல்



ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வனிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நேற்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

புத்தக வெளியீட்டு நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்தமைக்காகத் தமிழ்த் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரான தீபச்செல்வனிடம் இவ்வாறு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா.யோகேந்திரநாதனின் "34 நாள்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு" என்ற புத்தகம் எழுத்தாளர் தீபச்செல்வன் தலைமையில் அண்மையில் 06




'அரசியல் மூதறிஞர்'(?) நீதியரசர் விக்னேஸ்வரனின் அரசியல் நகர்வுகளைப் பார்க்கும்போது மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்பட வேண்டி உள்ளது.

திருமணத்துக்கு வரன் பார்க்க முன்னரே, பிறக்கப் போகும் பிள்ளைக்கு பள்ளிக்கூட அட்மிஷனுக்கு கல்லூரி தேடும் பத்தாம் பசலித்தனமாக இருக்கின்றது அவரது நடவடிக்கை.

தமிழ்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா என்று தமிழ் கட்சிகள் தமக்குள் கூடி ஒரு முடிவுக்கு வர முன்னரே விக்னேஸ்வரன் அவற்றையெல்லாம் ஒரே எட்டில் தாண்டி வேறு எங்கேயோ போய்விட்டார். அவரை ஒத்த மற்றைய தலைவர்கள் அவரைக் 06

# பொன்னாவெளியைப் பூர்வீகக் கிராமம் என்று கூறுகின்றவர்கள் அங்கு குடியேற முன்வந்தால் அதற்கு ஏற்பாடு செய்வதற்கு தயார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



பொன்னாவெளி கிராமத்தை பூர்வீக கிராமம் என்று கூறுகின்றவர்கள், அங்கு குடியேறுவதற்கு முன்வருவார்களாயின், அவர்களுக்கான வீட்டுத் திட்டத்தை ஏற்பாடு செய்து வழங்குவதற்குத் தாங்கள் தயாராக உள்ளனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

பொன்னாவெளி பிரதேசத்தில் இருந்து தற்போதுதான் மக்கள் வெளியேறினர் என ஒரு பொய்யான கருத்து வெளியிடப்பட்டு வருகின்றது. ஆனால் அதில் உண்மை கிடையாது. மக்களை அங்கு வாழ விடாது எவரும் தடுக்கவில்லை.

ஆனால் அங்கு வாழும் சூழலுக்கேற்ற வகையிலான குடிதண்ணீர் முழுமையாக அற்றுவிட்டது. நிலப்பரப்புகள் எல்லாம் உவர் நிலமாக மாறிவிட்டன. அதனால் எதுவிதமான பயிர் செய்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியது. இதனால் யுத்தம் நிறைவுக்கு வருவதற்கு முன்னரே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்ததாக தெரியவில்லை.

அதுமட்டுமல்லாது சுண்ணக்கல் அகழ்வதற்கான திட்டம் உடனடியாக முன்னெடுக்கப்படும் விடயம் ஒன்றல்ல. அது மட்டுமல்லாது மக்களது கருத்துக்களும் அதில் உள்வாங்கப்படும். அதேநேரம் குறித்த பகுதியை ஆய்வு செய்தால்தான் அங்கு குறித்த செயற்பாட்டை முன்னெடுக்கலாமா அல்லது கைவிட வேண்டுமா என்ற நிலைக்கு வரமுடியும்.

குறிப்பாக ஆய்வுகளுக்குச் சென்றபோது திட்டமிட்டவகையில் சில விசமிகள் அதைத் தடுக்கின்றனர். இதேநேரம் ஆய்வு செய்தால்தான் ஒரு நிலைப்பாட்டை எட்டமுடியும்.

ஆய்வின் முடிவுகள் பாதகமாக வருமாயின் அதை தடுப்பதற்கும் பின்னிற்கமாட்டேன்.

மக்களுக்கு ஏதாவதொரு அபிவிருத்தி அல்லது பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைக்க வரும் சந்தர்ப்பங்கள் அல்லது ஏதுநிலைகள் வரும்போதெல்லாம் இதர தமிழ் தரப்பினர் அவற்றைத் தடுக்கத்தான் முயற்சித்தார்களே தவிர, அவற்றை ஆராய்ந்து சிறப்பான தீர்மானங்களை எடுப்பதற்கு ஒருபோதும் முன்வருவதில்லை.

குறிப்பாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினூடாக கிடைத்த 13 ஆவது அரசமைப்பின் ஊடாகத்தான் எமது பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு ஓர் ஆரம்பமாக அமையும் என நான் அன்றிலிருந்து கூறிவருகின்றேன்.

ஆனால் அதைக்க டுமையாக எதிர்த்தார்கள். நடைமுறைக்கு கொண்டுவர விடமாட்டோம் என கூச்சலிட்டார்கள். ஆனால் இன்று அவ்வாறு கூச்சலிட்டவர்களே 13 தான் ஒரே வழி என இன்று முணுமுணுக்கின்றார்கள்.

இதேபோன்றுதான் இந்த பொன்னாவெளி விவகாரத்திலும் நான் மக்களுக்கு சாதகமான நன்மை விளைவிக்கும் ஒன்றுதான் எனக் கருதுகின்றேன்.

அதேநேரம் பாதகம் என்று ஆய்வுகள் தெரிவித்தால் அதை நிறுத்துவதற்கும் பின்னிற்கமாட்டேன்.

பொன்னாவெளியில் குடியேறுவதற்கு மக்கள் முன்வருவார்களாயின், அவர்களுக்கான வீட்டுத் திட்டத்தினை ஏற்பாடு செய்து வழங்குவதற்கு தயாராக இருக்கிறேன். - தெரிவித்தார்.

# மியன்மார் முகாமில் சிக்குண்டு பின் மீட்கப்பட்ட எண்மர் இலங்கைத் தூதரகத்தில் ஒப்படைப்பு!



மியன்மாரில் பயங்கரவாத தடுப்பு முகாமில் இருந்து மீட்கப்பட்ட 8 இலங்கையர்கள் தாய்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மார்ச் முதலாம் திகதி மீட்கப்பட்ட 08 பேரையும் விரைவில் நாட்டிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜானக பண்டார தெரிவித்துள்ளார்.

தற்போது மியன்மாரில் பயங்கரவாதிகளின் பிடியில் சிக்கியுள்ள ஏனைய 48 இலங்கையர்களும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

மியன்மார் - தாய்லாந்து எல்லையில் அரசாங்கத்துடன் தொடர்புபடாத ஆயுதக்குழுவொன்றின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் இலங்கையை சேர்ந்த 56 இளைஞர், யுவதிகள் தடுத்து வைக்கப்பட்டு கணினி குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கணினித் துறையில் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதாக கூறியே இவர்கள் மியன்மாருக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குடும்பத்தினருக்கும் காப்புறுதித் தொகை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை

தமது குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்புறுதித் தொகையை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான கோரிக்கை நாடாளுமன்றத் தலைவர்களிடம் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் தற்போது காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆண்டு தோறும் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையின் மதிப்பு 10 லட்சம் ரூபா ஆகும்.

இந்த நிலையில், அந்த காப்புறுதித் தொகையில் இருந்து குறிப்பிட்ட தொகையை குடும்ப உறுப்பினர்களுக்கும், காப்பீட்டுத் தொகையாக வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் நாடாளுமன்ற சபைக் குழுவின் கூட்டம் நடைபெற உள்ளதாகவும், அதன்போது இந்தவிடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டு. மாவட்டக் கிளைக் கூட்டம்











இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுநர் தந்தை செல்வாவின் 47 ஆவது வருட சிரார்த்த தினமன்று வழமை போல இம்முறையும் மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நடைபெற இருக்கின்றது.

தந்தை செல்வாவின் சிரார்த்த தினம் ஏப்ரல் 26ஆம் திகதியாகும்.


நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக்கிளையின் விசேட கூட்டத்தில் தந்தை செல்வாவின் சிரார்த்த தின நிகழ்வுகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட தலைவருமான இரா. சாணக்கியனின் மட்டக்களப்பு தொகுதி காரியாலயத்தில் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் நிறுவுநர் தந்தை செல்வா அவர்களின் 47 ஆவது வருட சிரார்த்த தினத்தை ஒட்டி, வழமை போன்று மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் முன்னணியில் ஏற்பாடு செய்யப்படும் இரத்தான முகாமை இம்மாதம் 27 ஆம் திகதி சித்தாண்டியில் நாடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேதினம் உட்பட பலதரப்பட்ட விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

## உள்ளூர் முட்டை விலை மீண்டும் அதிகரிக்கின்றது



உள்ளூர் முட்டை விலை தற்போது மீண்டும் அதிகரித்துள்ளதாக இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பொருளாளர் விஜய அல்விஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ளூர் முட்டையின் மொத்த விலை 50 ரூபாவாகவும், சில்லறை விலை 55 ரூபாவாகவும் உள்ளது.

எவ்வாறாயினும், இடைத்தரகர்கள் விலையை உயர்த்துகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முட்டையின் விலை உயர்த்தப்பட்டால் மீண்டும் இந்தியாவில் இருந்து, முட்டைகளை இறக்குமதி செய்யவேண்டி ஏற்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.



## தட்டுப்பாடின்றி எரிபொருளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை

பண்டிகைக் காலத்தில் எரிபொருள் விநியோகத்தை தட்டுப்பாடின்றி தொடர்ந்தும் பேணுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதற்குத் தேவையான கையிருப்பு உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், எரிபொருள் விநியோகத்திற்கு தேவையான தாங்கி ஊர்திகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என இலங்கைக் கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.




# விமானப் படையின் ஆளணி அரைவாசியாகக் குறையும்?

2030 ஆம் ஆண்டளவில் இலங்கை விமானப்படையில் சேவையாற்றும் 35,000 விமானப்படை வீரர்களின் எண்ணிக்கை 18,000 ஆகக் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறைக்கப்பட்ட விமானப்படையினரின் எண்ணிக்கைக்குப் பதிலாக நவீன தொழில்நுட்பத்தைஒ பயன்படுத்த எதிர்பார்ப்பதாகவும் விமானப்படைத் தளபதி மேலும் கூறியுள்ளார்.

அக்குரகொட விமானப்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விமானப் படைத் தளபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நாங்கள் ஏற்கனவே விமானப்படையின் ஆளணியைக் குறைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். தொழில்நுட்பம் அவ்வப்போது மாறுவதால், தேவைப்பாடும் குறைகிறது.

சிசிடிவி நமக்கு புதிதல்ல. அத்தகைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், விமானப்படையை ஓரளவுக் குறைக்கும் திறன் நம்மிடம் உள்ளது.

உயர்தொழில்நுட்ப கமெரா தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் படையினரின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாடுகளை ஏற்றிச்சென்ற லொறி மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்

மாத்தறை – கனங்கே, தொலேலியத்த பகுதியில் கட்டளையை மீறி பயணித்த லொறி மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மாடுகளை ஏற்றிச்சென்ற லொறி மீதே துப்பாக்கிச்சூட்டை நடத்தப்பட்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று கனங்கே ரஜமஹா விகாரைக்கு அருகாமையில், லொறியொன்றில் மாடுகள் ஏற்றிச்செல்லப்படுவதாக கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் அங்கு சென்றிருந்தனர்.

இதன்போது, லொறியிலிருந்த மூவர் மாடுகளைக் கடத்திச்செல்ல முயற்சித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் நடமாடும் சேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், தொலேலியத்த பகுதியில் மேற்படி லொறியை நிறுத்துமாறு கட்டளையிட்ட போதிலும் அதனை பொருட்படுத்தாது பயணித்தமையினால், பொலிஸாரினால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டினால் லொறிக்குள் இருந்தவர்களில் ஒருவரின் பாதத்தில் காயமேற்பட்டுள்ளது. மற்றைய இருவரும் தப்பியோடியுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த கிந்தொட்ட, மாபுகல பகுதியை சேர்ந்த நபர் கரவாப்பிட்டிய போதான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி லொறிக்குள் 5 வாகன இலக்கத்தகடுகள் இருந்தன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மதவாச்சியில் இளைஞர் மீது தாக்குதல்: இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது

அநுராதபுரம் – மதவாச்சியில் வைத்து 23 வயதான இளைஞர் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் சார்ஜன்ட் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி உத்தரவை மீறி பயணித்த லொறியை பின்தொடர்ந்து சென்று நிறுத்தி, அதிலிருந்தவர்களை கைது செய்ய முற்பட்டபோது, இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

தாக்குதலில் காயமடைந்த இளைஞர், மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் போது அவரது விதையொன்று அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# 9 நாள்களில் 50 ஆயிரத்து 537 சுற்றுலாப் பயணிகள் வருகை!

இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஏப்ரல் மாதத்தின் முதல் 9 நாள்களில் 50 ஆயிரத்தை கடந்துள்ளது.

ஏப்ரல் மாதத்தின் முதல் 9 நாள்களில் 50 ஆயிரத்து 537 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 9 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 6 லட்சத்து 86 ஆயிரத்து 321 பேர் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 45 வீத அதிகரிப்பாகும்.

## இலங்கையில் தொற்றுநோய்களைக் கண்காணிக்க

# ஸ்கான் இயந்திரங்களை வழங்கியுள்ளது ஜப்பான்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் கொழும்பு துறைமுகத்திற்கு 8.4 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உயர் தொழில்நுட்ப ஸ்கான் இயந்திரங்களை ஜப்பான் அரசாங்கம் வழங்கியுள்ளது.

வெளிநாட்டவர்கள் மூலமாக இலங்கையில் பரவும் வைரஸ் மற்றும் தொற்றுநோய்கள் போன்ற பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் நிலைமைகளை கண்காணிப்பதற்காகவே இந்த ஸ்கான் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் MIZUKOSHI Hideaki துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் இவற்றைக் கையளித்துள்ளார்.

இதனை தவிர, புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான சர்வதேச அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த



திட்டத்தின் கீழ், முழு உடல் ஸ்கானர்கள், வெளிநாட்டு கடவுச்சீட்டு ஸ்கானர்கள் உள்ளிட்டவையும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்திற்குள் 150 அலகுகளைக் கொண்ட மலசலகூட அமைப்பும் நிறுவப்படவுள்ளது.

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் மஸ்கெலியாவில் கைது!



மஸ்கெலியா, பிரவுன்ஸ்விக் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட 4 பேர் நேற்று முன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மஸ்கெலியா, பிரவுன்ஸ்விக் பிரதேசத்தைச் சேர்ந்த 36,37,40 மற்றும் 42 வயதுடையவர்களாவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹோட்டலில் யுவதி மர்ம மரணம்: அவருடன் சென்ற இளைஞர் கைது

அவிசாவளை பகுதியில் ஹோட்டல் அறையொன்றுக்குள் 23 வயது யுவதி சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அவருடன் ஹோட்டல் அறைக்குச் சென்றிருந்த இளைஞர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இருவருக்கும் இடையில் நேற்றுமுன் தினம் இரவு கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தான் உறக்கத்தில் இருந்து எழுந்து பார்த்தபோது, யுவதி சுயநினைவின்றி காணப்பட்டுள்ளார் என மேற்படி இளைஞர் தெரிவித்துள்ளார்.

இளைஞரின் வாக்குமூலத்தில் முரண்பாடு இருப்பதால் சந்தேகத்தின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது கொலையா அல்லது தற்கொலையாஎன்பதுபற்றி இன்னும்தெரியவரவில்லை. விசாரணைகள் தொடர்கின்றன.

நுவரெலியா, வலப்பனைப் பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த யுவதி கந்தப்பளைப் பகுதியைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இன்னும் 4 மாதங்களில் அரசியலுக்குக் ‘குட்பாய்’

## மொட்டு எம்.பி. விமலவீர அறிவிப்பு



இன்னும் நான்கு மாதங்களில் அரசியலில் இருந்து ஓய்வுபெறவுள்ளேன் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், அடுத்த தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்ற அறிவிப்பையும் அவர் விடுத்துள்ளார்.

அம்பாறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
கலைத்துத்தான் பிடிக்க வேண்டும் போல....!

யாழ்ப்பாணத்தில் இன்று கூடும் கூட்டத்துக்கு சூத்திரதாரி அவர்தான். அதற்கான அழைப்புக் கடிதத்தை பல தரப்புக்களும் அவரே அனுப்பி உள்ளார் – சமூகத்தில் முக்கிய கருத்துருவாக்கிகள் பலரையும் மறந்துவிட்டு.

அது ஒரு விவகாரமே அல்ல. அதை விட்டு விடலாம்.

இந்த விடயத்தில் – பொது வேட்பாளர் விவகாரத்தில் – தமிழர் தரப்பில் பிரதான அரசியல் கட்சி தமிழரசு. தமிழரசுதான். அது இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. தமிழரசில் ஒரு சில உதிரிகள் அப்படி, இப்படிக் கருத்து வெளியிட்டமையை வைத்துக் கொண்டு ஏதோ தமிழினமே முடிவெடுத்த மாதிரி அவசரப்பட்டு விழுந்தடித்து, முந்திக் கொண்டு காய் நகர்த்த முயல்கிறார் விக்கியர் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

இன்றைய கூட்டத்துக்கான அழைப்பு கடிதத்தோடு இன்னொரு கடிதத்தையும் அவர் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அனுப்பி இருக்கின்றார்.

அதன்படி –

பொது வேட்பாளரை நிறுத்தும் விடயத்தை முன்னெடுப்பதற்கு ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும், உபகுழுக்கள் நிறுவப்பட வேண்டும் என்றெல்லாம் கூட அவர் முடிவு எடுத்து அவற்றை எல்லாம் வழிகாட்டல் குறிப்பாக எழுத்தில் அனுப்பியிருக்கின்றார்.

1. பொருத்தமான பொது வேட்பாளரைப் பரிந்துரை செய்யும் குழு.
2. தேர்தல் விஞ்ஞாபனத்தை தயார் செய்யும் குழு.
3. சின்னம் தொடர்பான விடயங்களைக் கையாளும் குழு.
4. ஏனைய அமைப்புக்களையும் கட்சிகளையும் உள்ளீர்க்கும் குழு.
5. பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளும் குழு.
6. தேர்தல் செயற்பாடுகளையும் பரப்புரைகளையும் திட்டமிடும் குழு.
7. அலுவலக நிர்வாகம் மற்றும் நிதிக் குழு.

– இந்த உபகுழுக்களின் பங்கு, பணி, அவை எப்படி செயலபட வேண்டும் என்ற வரையறையை எல்லாம் அவர் செய்து விட்டார். பரிந்துரையாக இன்றைய கூட்டத்துக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்.

தமிழரசுக் கட்சி குழப்பத்தில் இருப்பதால்,அந்தநலிவுநிலையைப்பயன்படுத்தி தமிழ் தேசிய அரசியலில் மேலாதிக்கம் செய்யலாம் என்ற முனைப்புடன் முன்னெடுக்கப்படும் விக்கியின் அவசர காய் நகர்த்தல்களே இவை என்று எனக்குத் தோன்றுகின்றது.

தமிழரசார் தங்களுக்குள் மோதுவர். ஆனால் இப்படி அவசர குடுக்கைத்தனத்தில் தமிழரின் தலைவிதியை அலங்கோலமாக்கும் அரசியல் குழப்பம் செய்யும் அடாவடியை ஒன்றுபட்டு எதிர்கொள்ளர் என்பதுதான் என் கணிப்பு.

எனவே அவசர முயற்சி – Jump the gun – அரைவேக்காடாகத்தான் முடியும்.

## ராஜபக்ஷ பட்டாளத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பாதுகாத்து வரும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதிர்வரும் தேர்தல்களில் நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நாட்டு மக்கள் நிம்மதியுடன் வாழ்வார்கள்." – என்றார்.1

## சு.கவின் அதிகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்பது தொடர்பில் ஆராய்வதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும்18 ஆம் திகதி கூடவுள்ளது எனத் தெரியவருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகச் செயற்படுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்நிலையில், நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குழுவொன்று நிர்வாக சபைக் கூட்டத்தைக் கூட்டி பதில் தலைவர், பதில் செயலாளர், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் பதில் தலைவராக நிமல் சிறிபால டி சில்வா தெரிவு செய்யப்பட்டார். மேற்படி கூட்டத்தில் கட்சியின் போஷகரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது எடுக்கப்பட்ட முடிவுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும் கையளிக்கப்பட்டது. எனினும், இந்த நியமனம் சட்டவிரோதம் என மைத்திரி தரப்பு விளக்கமளித்துள்ளது.

இந்நிலையிலேயே கட்சி யாப்பின் அடிப்படையில் புதிய நியமனம் செல்லுபடியாகுமா, தேர்தல்கள் ஆணைக்குழு எந்தத் தரப்புடன் அதிகாரபூர்வமாகத் தொடர்புகொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயத் தேர்தல்கள் ஆணைக்குழு கூடவுள்ளது.

## தமிழ்ப் பொதுவேட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்நிலையில், பொது வேட்பாளர் தொடர்பில் கலந்துரையாடி ஒரு பொதுவான முடிவுக்கு வரும் முகமாக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது தமிழ்ப் பொது வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கும், அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவும் உபகுழு ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று தெரியவருகின்றது.

பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஈழத்து எழுத்தாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்தப் புத்தக வெளியீடு தொடர்பாக நேற்று விசாரணை இடம்பெற்றது என்று தீபச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த புத்தகம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள உருவாக்கும் நோக்கில் எழுதப்பட்டதா என்றும் விசாரணையின்போது கேட்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, குறித்த புத்தகத்தின் வெளியீட்டு விழாவை "நீங்கள் ஏன் நடத்தினீர்கள்?" என்று கேட்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியின் மூத்த எழுத்தாளர் நா.யோகேந்திரநாதனை மதிப்பளிப்புச் செய்யும் நோக்கிலேயே வெளியீட்டு விழாவை நடத்தியதாகத் தான் கூறினார் என்றும் தீபச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் 11 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட விசாரணை சுமார் இரண்டரை மணிநேரத்துக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# மூன்றாம் நாடுகளின் தேவையற்ற தலையீடுகள் குறித்து சீன அதிபர் இலங்கைப் பிரதமரிடம் நேரில் அதிருப்தி!



சீன நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு 'நியாயமான மற்றும் வெளிப்படையான' சூழலின் அவசியத்தை இலங்கைப் பிரதமரிடம் சீன ஜனாதிபதி நேரடியாக வற்புறுத்தினார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

முடிவுகளை எடுக்கும் போது தேவையில்லாமல் ஏனைய நாடுகள் அவற்றில் செல்வாக்குச் செலுத்துவது குறித்து சீனா மகிழ்ச்சியடையவில்லை என்றும் அவர் கூறினாராம்.

பிரதமர் தினேஷ் குணவர்தன் Boao Forum for Asia (BFA) மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கடந்த மார்ச் 25 முதல் 30 ஆம் திகதி வரை அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொண்டு சீனாவுக்கு சென்றிருந்தார்.

பிரதமரின் இந்த பயணத்தில் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், பிரதமர் லீ கியாங் உட்பட அந்நாட்டின் உயர் அரச அதிகாரிகளையும் சந்தித்திருந்தார். அப்போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கைத் தீவு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு சீனாவிடமிருந்து சில முதலீடுகள் மற்றும் உதவிகளை பெறும் நோக்கில் இலங்கைப் பிரதமரின் இந்தப் பயணம் அமைந்தது.

இதன்போது 9 ஒப்பந்தங்கள் இருநாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டன. இருநாட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் ஆழமாக ஆராயப்பட்டது.

இந்த நிலையில், ஜனாதிபதி ஷி ஜின்பிங் உடனான சந்திப்பின் போது, சீன நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு 'நியாயமான மற்றும் வெளிப்படையான' சூழலின் அவசியத்தை ஷி ஜின்பிங் வலியுறுத்தியுள்ளார்.

முடிவுகளை எடுக்கும் போது தேவையில்லாமல் ஏனைய நாடுகள் செல்வாக்கு செலுத்துவது குறித்து சீனா மகிழ்ச்சியடையவில்லை என்றும் ஷி ஜின்பிங் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆராய்ச்சி கப்பல்களை அனுமதியளிப்பதில்லை என்ற முடிவு குறித்து, சீனப் பிரதமர் லீ கியாங், பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கவலை வெளிப்படுத்தியிருந்தார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

# 5 வயது மகளையும், 3வயது மகளையும் துஷ்பிரயோகம் செய்த இளம் தந்தை

## தம்பலகாமம் சிராஜ் நகர் பகுதியில் அதிர்ச்சிச் சம்பவம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் தான் பெற்ற இரண்டு பிள்ளைகளை துஷ்பிரயோகம் செய்த சந்தேகத்தின் பேரில் அப்பிள்ளகளின் தந்தையைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பலகாமம் சிராஜ் நகர் பகுதியில் வசித்து வரும் முஹம்மது சனுஷ் (28வயது) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

மனைவி வெளிநாட்டுக்குச் சென்றிருந்த நிலையில் இரண்டு பிள்ளைகளும் தந்தையின் கண்காணிப்பில் இருந்துள்ளனர். இந்நிலையில் 5 வயது சிறுவனை துஷ்பிரயோகம் செய்த நிலையில் தம்பலகாமம் வைத்தியசாலையில் சிறுவன் அனுமதிக்கப்பட்டான்.

இதேவேளை மூன்று வயதுச் சிறுமி சலம் கழிக்கும் போது அழுவதை அவதானித்த அந்நபரின் உறவினர்களினால் சிறுமி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையௌ அவதானிக்க வைத்தியர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அது குறித்துத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மூன்று வயது சிறுமியின் வாக்குமூலத்தைப் பெற்றமையை



அடுத்துத் தந்தையை கைது செய்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

இதே நேரம் ஐந்து வயது சிறுவனிடம் பெறப்பட்ட வாக்குமூலத்திலும் தகப்பன் தன்னை துஷ்பிரயோகம் செய்ததார் எனத் தெரிவிக்கப்பட்டதாக அறிய வந்தது.

இதனை அடுத்து 28 வயதுடைய தந்தையை சந்தேகத்தின் பேரில் தாங்கள் கைது செய்துள்ளனர் எனவும் சந்தேக நபரைக் கந்தளாய் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு சிறார்களும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# மேலும் சில உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்கத் தீர்மானம்!

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் சிலவற்றின் விலைகளை குறைப்பதற்கு லங்கா சதொச தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, 189 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட வெள்ளை பச்சை அரிசி ஒரு கிலோ கிராம் 4 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 185 ரூபாவாகும்.

கோதுமை மா ஒரு கிலோ கிராம் 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், நெத்தலி ஒரு கிலோகிராம் 125 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மொட்டின் முடிவு மஹிந்தரிடம்...!

வரவிருக்கும்ஜனாதிபதித்தேர்தல்தொடர்பில் பொதுஜன பெரமுன கட்சியின் பிரமுகர்கள், எம்.பிக்கள் ஆளாளுக்கு முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வந்தமையை அடுத்து, கட்சியின் சார்பில் அவர்களுக்குக் 'கட்டாணை' வழங்கப்பட்டிருக்கின்றது. கட்சி திட்டவட்டமான ஒரு முடிவை எடுக்கும் வரை, எந்த ஒரு வேட்பாளருக்கும் தங்கள் ஆதரவு குறித்து பகிரங்க வெளியில் கருத்து வெளியிட வேண்டாம் என்று கட்சி தலைமை கட்சிப் பிரமுகர்களுக்குத் தடை விதித்திருக்கிறது. இது பற்றிய செய்திகள் வெளியாகி உள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இந்தத் தடை உத்தரவு குறித்து அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதற்கு முன்னர் மார்ச் 27ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்திலும் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டதாயினும், அதன் பின்னரும் அந்தத் தடையை மீறிக் கட்சியின் எம்.பிக்கள் பலரும் பொதுவெளியில் தங்கள் ஆதரவு வெளிப்பாட்டுக் கருத்துக்களை வெளியிட்டே வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

"வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் வேட்பாளர் யார் என்பதை முடிவு செய்யும் பொறுப்பபை கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் அரசியல் குழு ஒப்படைத்துள்ளது. உரிய சமயத்தில், உரிய முறையில் தீர்மானத்தை எடுத்து அவர் அறிவிப்பார். அதை அரசியல் குழு அங்கீகரிக்கும். அதுவரை கட்சியின் உறுப்பினர்கள் பொதுவெளியில் இது குறித்துக் கருத்து வெளியிட வேண்டாம் எனக் கேட்கப்பட்டுள்ளனர்" - என்று மொட்டுக் கட்சியின் எம்.பியான ரோஹித அபே குணவர்தன கூறியிருக்கின்றார்.

"இந்த மிகப்பெரிய பொறுப்பை அரசியல் குழு, கட்சித் தலைவரிடம் ஒப்படைத்துள்ளது. சரியான சமயத்தில் அரசியல் குழுவின் இணக்கத்துடன் அந்த முடிவை கட்சித் தலைவர் வெளியிடுவார்" - என்று அவர் கூறியிருக்கிறார்.

மொட்டுக் கட்சியைப் பொறுத்தவரை இது புதிய விடயம் அல்ல.

அக்கட்சி தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே கட்சியின் முடிவுகளை எடுக்கும் அதிகாரம் அதன் பிதாமகரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

ஏன், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் கூட, கட்சியின் வேட்பாளரைத் தெரிவு செய்யும் அதிகாரம் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தானே வழங்கப்பட்டிருந்தது?

அவரது அந்தத் தெரிவுதானே கடைசியில் அவர்களது கட்சியை மட்டுமல்லாமல், முழு நாட்டையுமே நடு வீதிக்குக் கொண்டு வந்து நிறுத்தியது...?

அந்த அனுபவத்தின் பின்னரும் மீண்டும் அதே மாதிரி பொறுப்பு மஹிந்த ராஜபக்ஷவிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ என்ற தனியான அரசியல் தலைமைத்துவப் பெயரை - 'இமேஜை' - சுற்றித்தான் பொதுஜன பெரமுன என்ற கட்சி கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. அதன் விளைவாகத்தான் இத்தகைய தனிமனித தீர்மானங்களுக்கு தலையசைக்கும் கட்சிப் போக்கு நீடிக்கின்றது. இத்தகைய அரசியல் போக்கு எவ்வளவு காலத்துக்கு வெற்றிகரமானதாகத் தாக்குப் பிடிக்கும் என்பதற்கு காலம் விரைவில் பதில் கூறும்.

மஹிந்த ராஜபக்ஷவால் ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ தாம் ஜனாதிபதியான பின்னர் மஹிந்தவின் சொல் கேட்கவே இல்லை. அல்லது மஹிந்தவினால் தமது சகோதரர் கோட்டாபயவை வழிநடத்த முடியவில்லை. அது அப்போதே எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

அரசியலில் அரிச்சுவடி கூடப் படித்தறியாத கோட்டாபய பெருவெற்றியுடன், மிக வலிமையான நாடாளுமன்றப் பலத்துடன், அதிகாரத்தில் இருந்தும், குறுகிய காலத்தில் தோற்றுப் போன தலைவராக நாட்டை விட்டு ஓடித் தப்ப வேண்டிய நிலைமை வந்தது இதனால்தான்.

இப்போதைய நிலையில், தனிப்பட்ட ரீதியில் மஹிந்தவின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் என்பது ஓரளவு தெரிந்த விடயம்.

கோட்டாபய போல ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தல் மூலம் ஜனாதிபதியானால் அதன் பின்னர் மஹிந்தவின் சொல் கேட்கமாட்டார் என்பது நிச்சயம்.

ஆயினும் கோட்டா மாதிரி அவர் நாட்டைப்போட்டடிக்காமல்விட்டால் சரி.

# தி.மு.கவை பழிவாங்க பா.ம.கவை வெற்றி பெறச் செய்ய வேண்டும்

## அன்புமணி கோரிக்கை



“அ.தி.மு.க. தேசிய கட்சிகளோடு கூட்டணி வைக்க வில்லை, பிரதமர் வேட்பாளர் கிடையாது, தேர்தலில் வெற்றி பெற்றால் பழனிசாமி முதல்வராக போவதில்லை. எனவே, எதிரியாக இருக்கும் தி.மு.கவைப் பழிவாங்க அ.தி.மு.கவினர் பா.ம.கவை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.”

– இவ்வாறு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சேலம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் பா.ம.க. வேட்பாளர் என். அண்ணாதுரையை ஆதரித்து, சேலம் மெய்யனூரில் நடைபெற்ற பிரச்சார பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எதிர்வரும் 2026 இல் நடைபெறவுள்ள தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில், தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. இல்லாத கூட்டணி ஆட்சி ஏற்படப்போகிறது. அதற்கான முன்னோட்டம் தான் இந்த தேர்தல். அதை மனதில் வைத்தே இந்த கூட்டணியில் சேர்ந்தோம்.

தி.மு.கவை தொடங்கியவர் அண்ணாதுரை. அவரை எனக்கு மிகவும் பிடிக்கும். அந்த அண்ணாதுரை தி.மு.கவும், அ.தி.மு.கவும் மறைந்துவிட்டன. அவரது கொள்கைளையும் முற்றிலும் மறந்துவிட்டனர். சேலத்துக்கு வரும்போதெல்லாம் வீரபாண்டியாரின் நினைவு வரும். டாக்டர் ராமதாஸும், வீரபாண்டியாரும் சேர்ந்து, பல சமூக போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

ஆனால், அவர் தி.மு.கவில் இருந்தார். அவர், சேலம் மாவட்டம் பல்வேறு வளங்களை பெற காரணமாக இருந்தார். ஆனால், வீரபாண்டியாரை தி.மு.க. மறந்துவிட்டது.

சட்டப்பேரவை தேர்தலின்போது 550 வாக்குறுதி அளித்த தி.மு.க, அதில் 50 ஐ கூட நிறைவேற்றவில்லை. அரசு ஊழியர்களுக்கு, பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் கொண்டு வரப்படும் என்று ஸ்டாலின் கூறினார். ஆனால், நிறைவேற்றவில்லை. தி.மு.க. என்றாலே வாக்குறுதி மன்னர்கள். கருணாநிதி, ஸ்டாலின் ஆகியோரைத் தொடர்ந்து, உதயநிதியும் வாக்குறுதி அளிப்பதோடு சரி, அதை நிறைவேற்றுவதில்லை.

அரசு ஊழியர்கள் தி.மு.கவை தோற்கடித்தால், ஸ்டாலின் பயந்துபோய் உடனே பழைய ஓய்வூதிய திட்டத்துக்கு கையெழுத்து போடுவார். எனவே, தி.மு.கவை தோற்கடியுங்கள். சேலத்துக்கு வந்த பிரதமர் மோடி, ராமதாஸைக் கட்டி அணைத்து, மரியாதை கொடுத்து பேசினார். பா.ஜ.க. கூட்டணியின் மிக மூத்த தலைவர் என்று பேசினார். ராமதாஸின் அனுபவமும், அன்புமணியின் திறமையும் நாட்டுக்கு தேவை என்று பேசினார். இது தமிழர்களுக்கெல்லாம் பெருமை.

சில வார்த்தைகளை பேசிய பிரதமர் மோடி, தமிழில் பேச முடியவில்லை என்று வருத்தப்பட்டார். ஆனால், தமிழை வைத்து ஆட்சிக்கு வந்த தி.மு.க, அ.தி.மு.கவினர் தமிழை மறந்துவிட்டனர். தாய்மொழியான தமிழை படிக்காமலே, பட்டம் வாங்கிவிடலாம் என்ற நிலை தான் தமிழகத்தில் உள்ளது.” – என்றார்.

# திட்டும் அரசியலுக்கு பதிலாக திருத்திக்கொள்ளும் அரசியல்

## கமல்ஹாசன் யோசனை



“நவீன அரசியல் திட்டிக்கொள்ளும் அரசியலாக இருக்கக் கூடாது. திருத்திக்கொள்ளும் அரசியலாக இருக்க வேண்டும்.”

– இவ்வாறு மதுரையில் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் செய்தபோது ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

மதுரை ஆனையூரில் நேற்று மநீம தலைவர் கமல்ஹாசன், மார்க்சிஸ்ட் கட்சி வேட்பாளர் சு.வெங்கடேசனுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நான் ஏன் அரசியலுக்கு வரவேண்டும் என கேட்கின்றனர். இங்கு நல்லது செய்ய வேண்டுமென்றால் கூட அனுமதி பெற வேண்டியுள்ளது. அரசியல் ஒரு பலம். அரசியலுக்கு வந்தால்தான் நல்லது செய்ய முடியும் என்று புரிந்து கொண்டு அரசியலுக்கு வந்தேன். வேட்பாளர் சு.வெங்கடேசனும் வந்த காரணமும் அதுதான். நான் வித்தியமாசமான அரசியல் செய்ய வந்திருக்கிறேன். செய்யப்போவதைப் பற்றித்தான் பேச வேண்டும். செய்யத் தவறியவர்களை பற்றி பேசுவது நேர விரயம்.

தமிழகத்தை விளையாட்டு தலைநகரமாக்க வேண்டும் என்று அமைச்சர் உதயநிதி பாடுபடுகிறார். அது நிச்சயம் நிறைவேறும் நல்லவர்கள் கையில் ஆட்சி கிடைத்தால் மக்களுக்கு நல்லது நடக்கும். இதேபோல் கூட்டத்தை 100 ஆண்டுக்கு முன்பு காந்தியார் மட்டுமே கூட்டியிருக்க முடியும். காந்தியார் சட்டையைத் துறந்தது மதுரையில்தான். இங்கே நான் செய்து கொண்டிருக்கும் நல்லவைகள் நாடெங்கும் பரவ வேண்டும். செய்யவில்ல என சுட்டிக்காட்டுவதைவிட செய்திருக்கிறோம் என சுட்டிக்காட்ட வேண்டும்.

தமிழகத்தில் நடக்கும் நல்ல அரசியலால்தான் நாட்டிலேயே அதிகபட்சமாக 43 சதவீத பெண்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்றனர். அதற்கு இங்கு நடந்த நல்ல அரசியல் தான் சாத்தியப்பட்டது. கீழடிக்கு அருங்காட்சியகம் கேட்டோம். செய்யவில்லை. குஜராத்தில், ஆந்திராவில், பிஹாரில் எய்ம்ஸ் உருவாக்க முடிந்த உங்களுக்கு ஏன் தமிழகத்தில் உருவாக்க முடியவில்லை? தமிழகத்துக்கு மட்டும் ஏன் இந்த பணிகளில் எல்லாம் ஓரவஞ்சனை.

அண்ணா சொன்னதுபோல் தெற்கு தேய்ந்து கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க இந்த தேர்தலில் கேடயமாக சு.வெங்கடேசன் இருக்கிறார். நல்லதை தொடரவேண்டும் என்றால் இவருக்கு வாய்ப்பு கொடுத்தே ஆகவேண்டும். எனக்கு என்ன லாபம் என்பதை விட மதுரைக்கு என்ன லாபம், மக்களுக்கு என்ன லாபம் என நினைத்தால் நாளை நமதாகும்.” – என்றார்.




# சீன விமானங்கள், கப்பல்கள் தைவானை சுற்றி வளைத்தன



தைவானை சுற்றி சீனாவின் 14 போர் விமானங்கள் மற்றும் ஆறு கடற்படை கப்பல்கள் முற்றுகையிட்டன என தைவானின் தேசிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில் இரண்டு விமானங்கள் தைவானின் ஜலசந்தி மத்திய கோட்டு பகுதியில் பறந்தன எனவும் நான்கு விமானங்கள் அந்த நாட்டின் வான் பாதுகாப்பு கண்டறியும் மண்டல பகுதிக்குட்பட்ட தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு மூலை பகுதிகளிலும் பறந்துள்ளன என்றும் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவமானது நேற்று முன்தினம் காலை ஆறு மணி முதல் நேற்று காலை ஆறு மணி முதல் இடம்பெற்றுள்ளது.

சீனாவை ஒட்டியுள்ள தைவான் சுயாட்சி தன்மையுடன் தனி நாடாக செயல்பட்டு வருகின்ற நிலையில் தன்னுடைய ஒருங்கிணைந்த பகுதிகளில் ஒன்றாக தைவானை சீனா பார்க்கிறது.

இந்த நிலையில், தைவானுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆதரவுகரம் நீட்டி வருவதனால் ஆத்திரமடைந்துள்ள சீனா அவ்வப்போது தைவானை சுற்றி இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகிறது.

அவ்வப்போது சீனாவை சேர்ந்த இராணுவ விமானங்கள், கடற்படை கப்பல்கள் தைவானின் வான்பரப்பை சுற்றி வந்து அத்துமீறலில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் இதனை கண்டறிந்து தைவானும் பதில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

சீனாவின் இந்த நடவடிக்கையால் அவர்களுடைய இராணுவ நடவடிக்கையை கண்காணிக்கும் வகையில் விமானம், கடற்படை கப்பல்கள் மற்றும் வான் பாதுகாப்பு ஏவுகணை சாதனங்களை தைவான் குவித்தன.

ஏப்ரலில் இதுவரை சீனாவின் இராணுவ விமானங்களை 71 முறையும் மற்றும் கடற்படை கப்பல்களை 63 முறையும் தைவான் கண்டறிந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மார்ச் மாதத்தில் தைவானை சுற்றி சீனாவின் 359 இராணுவ விமானங்கள் மற்றும் 204 கடற்படை கப்பல்கள் கண்டறியப்பட்டன என ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

தைவானின் வான் மற்றும் கடல் பகுதிகளை சுற்றி இயக்கி வரும் கடற்படை கப்பல்கள் மற்றும் இராணுவ விமானங்களின் எண்ணிக்கை கடந்த 2020 ஆம் ஆண்டு செப்டம்பரில் இருந்து தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில் இது தைவானுக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்தாலும் இதற்கு தைவான் பதிலடியும் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக நாடுகளில் பரவும் கக்குவான் இருமல் தொற்று



உலகின் பல நாடுகளில் சுவாச அமைப்புடன் தொடர்புடைய தொற்று நோயான கக்குவான் இருமல் மீண்டும் பரவி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் வருடந்தோறும் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் கக்குவான் இருமல் நோயால் பாதிக்கப்பட்டு இறப்புகள் பதிவாகி வருகின்றன.

இந்த நிலையில், 2024 ஆம் ஆண்டு இந் நோய்த்தாக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நோயின் தாக்கம் சீனா, பிலிப்பைன்ஸ், நெதர்லாந்து, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் மட்டும் சீனாவில் இருந்து 32 ஆயிரத்து 380 பேர் கக்குவான் இருமல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் 13 இறப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 20 வீத அதிகரிப்பு என சீன அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், கடந்த ஆண்டை விட பிலிப்பைன்ஸில் கக்குவான் இருமல் நோயாளிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பறவைகளுக்கு மரங்களில் தண்ணீர் தொட்டி அமைக்கும் வவுனியாப் பிரதேச இளைஞர்கள்



(கே.வசந்தன்)

அதிக வெப்பமான காலநிலை நிலவுவதால் விலங்குகளின் நீர்த் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு வவுனியா – மன்னார் வீதியின் சில பகுதிகளில் மண் சட்டி மற்றும் சிரட்டைகளைப் பயன்படுத்தி இளைஞர்களினால் தண்ணீர் தொட்டி நேற்று அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக பறவைகள் பல நீரின்றி அவதிப்படுகின்றன.

இந்நிலையில் இளைஞர்கள் சிலர் தாமாக முன்மாதிரியாக வவுனியா – மன்னார் வீதியில் காணப்பட்ட மரங்களில் மண்சட்டி மற்றும் சிரட்டை என்பவற்றை மரக்கிளைகளில் கட்டி அதற்குள் நீர் விட்டு தொட்டி அமைக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

இளைஞர்களின் மனிதநேயமிக்க குறித்த செயற்பாடு பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் இருந்து ரூ.15 லட்சம் பலஸ்தீன உறவுகளுக்கு அன்பளிப்பு







(கே.வசந்தன்)

வவுனியா தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் ஏற்பாட்டில் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக பலஸ்தீன உறவுகளுக்கான நிதியத்திற்கு பதினைந்து லட்சம் ரூபா பணம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் கடந்த திங்கள் கிழமை வரை வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைத்து தரப்பினரும் சகோதரத்துவ உணர்வோடு 15,00,552 ரூபா பணத்தை வழங்கியிருந்தனர்.

அந்த நிதி ஜனாதிபதி செயலகத்தில் உள்ள பலஸ்தீன உறவுகளுக்கான நிதியத்திற்கு வழங்குவதற்காக நிதியத்தின் இலங்கை வங்கி கணக்கிலக்கத்திற்கு சம்பந்தப்பட்ட அமைப்பினரால் நேற்று முன்தினம் வைப்புச் செய்யப்பட்டது.

## 15 ஆம் திகதி வரை விசேட ரயில் சேவை




பயணிகளின் சௌகரியங்களை கருத்திற் கொண்டு, மேலதிகமாக 12 ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் எம்.ஜே இந்திபொல தெரிவித்துள்ளார்.

இந்த ரயில் சேவைகளானது இம்மாதம், 15ஆம் திகதி வரையில் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேவையேற்படுமானால் மேலதிகமாக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் எம்.ஜே. இந்திபொல தெரிவித்துள்ளார்.


## மதுபானச் சாலைகளுக்கு இன்றும், நாளையும் பூட்டு




நாடு முழுவதும் உள்ள அனைத்து மதுபானச் சாலைகளும் இன்றும், நாளையும் மூடப்படவுள்ளன.

தமிழ் – சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இவ்வாறு மதுபானச் சாலைகள் மூடப்படவுள்ளன என மதுவரித் திணைக்களம் அறிவித்தது.

இதேவேளை, மதுபானசாலைகள் நேற்று இரவு 10 மணி வரை திறந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



# மானிப்பாய் மருதடியில் சப்பரத வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம் – மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய சப்பரத வெள்ளோட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 04 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போது பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

நாளை மறுதினம் 14ஆம் திகதி மருதடி விநாயகர் ஆலயத் தேர் திருவிழா இடம்பெறவுள்ளது.








# சிறு விவசாயிகளை வலுப்படுத்துதல் திட்டம் வவுனியாவில் மிகவும் வெற்றிகரமாக நிறைவு

(கே.வசந்தன்)

மேம்படுத்தப்பட்ட உணவு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக சிறு விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் வீடு சார்ந்த விவசாயத் தொழில்களை வலுப்படுத்துதல் நிகழ்ச்சி திட்டம் 1,500 பெண்களின் பங்களிப்புடன் வவுனியாவில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2023 இல் பல்ம் அமைப்புடன் இணைந்து, ஜப்பானிய துணை பட்ஜெட் உதவியின் கீழ், குடும்ப ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் “மேம்படுத்தப்பட்ட உணவு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக சிறு விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் வீட்டு சார்ந்த விவசாயத் தொழில்களை வலுப்படுத்துதல்“ என்ற திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது.

இந்த திட்டத்தில் வவுனியா, வவுனியா தெற்கு மற்றும் வெங்கலச்செட்டிக்குளம் ஆகிய 03 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 52 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 1500 பெண்கள் பயனடைந்தனர். இந்த திட்டத்தில் 30,000 கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

தற்போது வவுனியா மாவட்டத்தில் மாதாந்தம் 288,000 முட்டை உற்பத்தியை காணமுடிகிறது. இதுவரை, இருபது விவசாயிகள் மற்றும் இருபது பொருத்தமான நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இருபது ஏக்கர் பரப்பளவில் தொடர்ந்து கோழித்தீன்களை வழங்குவதற்காக சோளம் பயிரிடப்பட்டுள்ளது.

மேலும் யுஎன்டிபி அதற்கான விதைகள் மற்றும் நீர்ப்பாசன முறைகளை வழங்கியது. அனைத்து இருபது விவசாயிகளுக்கும் சோளப்பயிற்செய்கை செய்வதற்காக 150 கிலோ சோள விதைகள் விநியோகிக்கப்பட்டன. இருபது விவசாயிகளும் சோளம் பயிரிட்டு 12,500 கிலோ சோளத்தை தங்கள் பயிர்ச் செய்கை மூலம் பெற்றனர். இதன் மூலம் பெண்களுக்கான தொழில் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன், பொருளாதார மீட்சியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் நிறைவு விழா வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பி.எம்.ஏ.கே.குமார, பல்ம் நிறுவன செயற்றிட்ட முகாமையாளர் சுனில் தொம்பேபொல, திட்ட முகாமையாளர் தமித் சந்திரசேகர, கள ஒருங்கிணைப்பாளர் கீர்த்திகா விஜயசுந்தர, யுஎன்டிபி நிறுவன உறுப்பினர்கள் மற்றும் இத்திட்டத்தில் பணியாற்றிய அரசாங்க, நிறுவன உத்தியோகத்தர்களுடன் இணைந்து பணியாற்றிய பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட பிரதேச செயலாளர்கள், செயற்றிட்டத்தின் முகாமையாளர், யுஎன்டிபி நிறுவன உறுப்பினர்களுக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையுடன் அரசாங்க மற்றும் நிறுவன உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

இச் செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளரால் செயற்றிட்ட பெறுபேறுகள் தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இச்செயற்றிட்ட வெற்றிக் காணொலிகள் காண்பிக்கப்பட்டு நிகழ்வு தேசிய கீதத்துடன் நிறைவு பெற்றது.









# இன்றைய ராசி பலன்கள் - 12.04.2024




இன்று செய்ய வேண்டிய காரியங்களை எதிர்கொள்வது கடினமாக இருக்கும். உங்கள் பொறுமையை இழக்க நேரிடலாம். உங்கள் அணுகுமுறையில் அமைதியும் உறுதியும் அவசியம்.

இன்று பணிகள் சுமுகமாக நடப்பதற்கு சாத்தியமான நாளாக அமையாது. பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணை உங்களை உதாசீன்படுத்துவதன் காரணமாக உங்களுக்கு எரிச்சல் ஏற்படும்.உங்கள் எரிச்சல் உணர்வுகளை அவரிடம் வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. அதனால் குழப்பத்துடன் காணப்படுவீர்கள். எதிர்பாராத வகையில் பணம் வந்தாலும் பயனுள்ள வகையில் அதை பயன் படுத்த முடியாது.

கண்கள் மற்றும் தொண்டை எரிச்சல்கள் போன்ற பாதிப்புகளுக்கு இன்று சிகிச்சை தேவைப்படலாம். உங்கள் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




உங்கள் செயல்களை உறுதியுடன் மேற்கொள்வதற்கு மிகுந்த பொறுமை அவசியம்.செயல்களில் தாமதம் நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டியது அவசியம்.

உங்களுக்கும் உங்கள் துணையாருக்கும் இடையே யான குறைவான புரிந்துணர்வு காரணமாக அவரிடம் உங்களுக்கு கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

தேவையற்ற கூடுதல் செலவினங்களை சந்திக்க நேரலாம். உங்களிடம் குறைந்த பணமே காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மனஅழுத்தம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். நீங்கள் மிகவும் சோர்வாகவும் அசௌகரியமாகவும் உணர்வீர்கள்.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியாகவும் பொறுமையாகவும் இருப்பது அவசியம் மற்றும் நல்லது.

உங்களிடம் காணப்படும் சிறப்பான திறமை காரணமாக உங்கள் பணிகளை நன்றாக செய்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நல்ல புரிந்துணர்வையும் அனுசரணையான அணுகுமுறையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படாது. செலவினங்களையும் எதிர்கொள்ள நேரலாம்.

இன்று பதற்றம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.




உங்களிடம் காணப்படும் ஆர்வம் காரணமாக செயல்களை விரைந்து முடிப்பீர்கள். உங்கள் நலனுக்கான பயனுள்ள முடிவுகளை விரைந்து எடுப்பதற்கு உங்கள் மனமும் விரைவாகச் செயல்படும்.

இன்று சிறந்த வெற்றி கிடைக்கும். உங்கள் மேலதிகாரியிடமிருந்து பதவி உயர்வு என்ற பெயரில் அங்கீகாரம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனது உணர்ச்சிக்கு ஆட்பட்ட நிலையில் இருக்கும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். அது உங்கள் உறவை வளர்க்க உதவும்.

இன்று வளர்ச்சி காணப்படும். வசதியுடன் இருப்பீர்கள். உங்கள் வங்கியிருப்பை அதிகரிக்கச் செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று மிகுந்த ஆற்றலுடனும் உற்சாகத்துடனம் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள்அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழலில் சில ஏமாற்றங்களை உணர்வீர்கள். சக பணியாளர்களின் ஆதரவு குறைந்து காணப்படும். அதனால் பணி வளர்ச்சி பாதிக்கப்படும்.

நீங்கள்இன்று மிகவும் மகிழ்ச்சிகரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடத்தில் அந்த உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் அவருடன் உங்களுக்கு நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

செலவுகளும் பொறுப்புகளும் அதிகரிக்கும் காரணத்தால் இன்று கணிசமான தொகை சேமிக்க இயலாது.

நீங்கள் உறுதியுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியமும் சிறந்து காணப்படும்




ஆன்மீகச் செயல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் மகிழ்ச்சி காணலாம். முன்னேறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அதற்கு தேவையான முக்கியமான விஷயங்களில் ஒன்று கடவுள் வழிபாடு.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக பலன்கள் கிடைக்கும். அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

இன்று உங்கள் துணையுடன் ஒரு இணக்கமான உறவை பராமரிக்க இயலாது. குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு கொள்ள நேரலாம்.

குறைந்த அளவு பணமே காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

ஒவ்வாமை காரணமாக சளி சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக்கப்படுவீர்கள்.




நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள். நேர்மறையான அணுகுமுறை அவசியம். தியானம் மற்றும் பிரார்த்தனை உங்களை சரியான பாதைக்கு அழைத்துச் செல்லும்.

இன்று முடிக்க வேண்டிய பணியில் உங்கள் சக பணியாளர்களுடன் சில மோதல்கள் காணப்படும். அதனால் பணிகள் நிலுவையில் இருக்கும். சகபணியாளர்கள் உங்களை நிந்திப்பார்கள்.

உங்கள் துணையுடன் கவனமாக பழக வேண்டும். உங்கள் இருவருக்கும் இடையே தொடர்பாடலில் சில குறைபாடுகள் காணப்படும்.

இன்று மகிழ்ச்சிகரமான நாளாக அமையாது. பண இழப்புகள் காரணமாக உங்கள் கையிருப்பு கரையும் வாய்ப்பு காணப்படுகின்றது.

காதுவலி ஏற்படலாம். உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுங்கள்.




இன்றைய நாள் சமநிலையுடன் காணப்படும். நீங்கள் நினைத்ததை அடைவதற்கு குறைந்த அளவு முயற்சியே போதுமானதாக இருக்கும். உங்களுடைய இலக்குகளும் இலட்சியங்களும் சற்று இலகுவாக இருக்க வேண்டும்.

நீங்கள் பணியாற்றும் விதத்தில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் சகபணியாளர்களுக்கு நீங்கள் ஒரு முன்மாதிரியாக திகழ்வீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இன்று மிகவும் கலகலப்பாக காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான எண்ணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று அதிர்ஷ்டத்தின் சாயல் காணப்படும். அதன் காரணமாக கணிசமான தொகையை தக்க வைத்துக் கொள்ள வழி கிடைக்கும்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். கூடுதலான ஆற்றலும் நல்ல தேக ஆரோக்கியமும் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.04.2024




இன்றைய நாள் அபாரமான நாளாக இருக்கும். உங்கள் தொடர்பாடல் திறமை மூலமாக உங்கள் பிரியமானவர்களின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப் படும் திறம்பட செயலாற்ற கால அட்டவ ணையை பின்பற்ற வேண்டும்.

இன்று மாலை உங்கள் துணையை சந்திப்பீர்கள். இது உங்கள் இருவருக்கும் ஒரு நல்ல சந்திப்பாக அமை யும். மகிழ்ச்சி தரும் வார்த்தைகளைப் பேசி உங்கள் துணையை திருப்திபடுத்துவீர்கள்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். நிதிநிலையில் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் காணப்படாது. ஆடை ஆபரணம், ஆடம்பரப் பொருள்கள் போன்ற பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுகளும் காணப்படாது.




எதையோ இழந்தது போன்று உணர் வீர்கள். சோர்வுடன் காணப்படுவீர்கள். அதனை தவிர்த்து சுறுசுறுப்புடனும் நேர் மறை எண்ணத்துடனும் இருக்க முயலுங் கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியில் உங்களின் வேலையின் தரம் குறைந்து காணப்படுவதன் காரணமாக உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளின் கேள்விக்கு ஆளாகும்.

உங்கள் துணையுடன் பேசும்பொழுது கோபமான உணர்ச்சி காணப்படும். நல்லுறவை பராமரிக்க அத்த கைய உணர்வுகளை தவிர்த்து எதையும் எளிதாக எடுத் துக்கொள்ளப் பழகுங்கள்.

கூடுதல் சுமைகள் காரணமாக இன்று பணத்தை அதிக அளவில் செலவு செய்ய நேரிடும்.

உங்கள் மனதில் தோன்றும் அமைதியற்ற உணர்வுக ளின் காரணமாய் அசெகரியங்களை உணர்வீர்கள். இதனால் நீங்கள் தலைவலியால் அவதிப்பட நேரிடலாம்.




எதிர்மறை எண்ணங்கள் தோன் றலாம். அதை தவிர்க்க வேண்டும். இல்லையெனில் வெற்றி காண்பது கடினம்.

பணியில் அதிக பொறுப்புகளை சுமக்க நேரிடும் பணியில் கவனம் செலுத்த வேண்டும். உங்களின் மேலா ன கவனம் பணியில் முன்னேறிச்செல்ல வழிகாட் டும்.

நீங்கள் உணர்ச்சிவயப்பட்ட நிலையில் காணப்படு வீர்கள். அதனை உங்கள் அணுகுமுறையிலும் வெளிப்படுத்துவீர்கள். அதனால் தேவையற்ற சச்சரவு கள் ஏற்படலாம்.

பணவளர்ச்சி காண்பது கடினமாக இருக்கும். பணஇழப்புகள் ஏற்படலாம்.

தொண்டையில் தொற்று ஏற்படலாம். வெந்நீர் குடிப்பதன் மூலம் உபாதைகள் குறையலாம்.




இன்றைய நாள் துடிப்புடன் காணப் படும். வெற்றிக்கான முயற்சி செய்வீர்கள். திடமான சிந்தனையும் செயலாக்கமும் காணப்படும். வெற்றிக்கான உங்கள் முயற்சி ஜெயிக்கும்.

உங்கள் பணியில் தவறுகள் நடக்க வாய்ப்பு உள்ளது. எனவே பணியில் கவனமாக இருப்பது நல்லது.

உங்கள் துணையுடன் தார்மீக நெறிமுறைகளை கையாள்வீர்கள். இதனால் அவரை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

உங்களிடமுள்ள பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள். நல்ல முதலீட்டு ஆலோசனைக ளில் பங்குபெறுவீர்கள்.

நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் எதையும் இலேசாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் தைரியம் உங்களை ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும்.



